**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி**
**முன்னிலை – திருமதி.P. கனிமொழி , B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
2025 ம் ஆண்டு ஜூன் மாதம் 16 ம் நாள் திங்கட்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2056, விசுவாவசு வருடம் ஆனி மாதம் 2ம் நாள்
**இ.ம.எண். 1/2024**
**இல்**
**அசல் வழக்கு எண். 212/2019**

ஈசாக்குபாலகுரு ..மனுதாரர்/ பிரதிவாதி

//எதிர்//

அருள்தாஸ் ..எதிர்மனுதாரர்/ வாதி

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 16.06.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.N. கோபிநாத் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் A. ராம்குமார் அவர்கள் ஆஜராகியும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்த பிறகு நன்கு பரிசீலித்தபின் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

மனுதாரர் இம்மனுவை வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்து தாவா சொத்திகளில் அமைப்பு மற்றும் அமைவிடத்தை பார்வையிட்டு வரைபடத்துடன் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடவேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம்:**

2. இந்த மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி ஆவார். தாவா சொத்துகள் ஏற்கெனவே எதிர்மனுதாரருக்கு சொந்தமாக இருந்து வந்தது என்றும், தாவா சொத்துகளில் உள்ள திருச்சபையின் RCC கட்டிடம் எதிர்மனுதாரர் செலவில் கட்டவில்லை என்றும், வழக்கு சொத்துக்களில் தனக்கும் தனது வாரிசுகளுக்கும் எவ்வித பாத்திய சம்மந்தமும் பின் தொடர்ச்சியும் இல்லை என்றும், வழக்கு சொத்தைப் பொறுத்து கடந்த 18.07.2007 மற்றும் 11.04.2016 ஆகிய தேதிகளில் GEMS-ன் தற்கால Chairman பெயருக்கு இனாம் சாசனம் எழுதிக்கொடுத்துவிட்டதாகவும், இதற்கு பின்

GEMS நிறுவனம் வழக்கு சொத்தில் திருச்சபையும் அதன் பின்புறம் ஊழியம் செய்யும் போதகரான தனக்கு குடியிருக்க வீடு கட்டி கொடுத்ததாகவும், மேற்படி குடியிருக்கும் வீட்டில் தான் குடியிருந்து கொண்டு திருச்சபையில் போதகராக ஊழியம் செய்து வந்ததாகவும், மேற்படி திருச்சபையின் முழு நிர்வாகமும் GEMS நிறுவனத்தின் பொறுப்பில் தான் உள்ளது என்றும், மேற்படி நிர்வாகத்திற்கும் இந்த எதிர்மனுதாரருக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என்று கூறியுள்ளார்.

3. எதிர்மனுதாரர் பிராதில் தான் சரிவர ஊழியம் செய்யவில்லை என்றும், கடந்த 2017ஆம் ஆண்டு மே மாதம் தன்னை போதகர் பதவியில் இருந்து நீக்கிவிட்டதாக எதிர்மனுதாரர் வழக்கிற்காக பொய்யாக கூறுவதாகவும், மேற்படி GEMS நிறுவனம் அப்படி ஏதும் செய்யவில்லை என்றும், வழக்கு சொத்திற்கு தொடர்பற்ற நபரான எதிர்மனுதாரர் வழக்கு சொத்தை அபகரிக்க முயற்சித்ததாகவும், அதற்கு தான் இடையூறாக இருந்ததால் தனக்கு எதிராக பொய்யான ஆவணங்களை தயாரித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்கு சொத்தில் உள்ள திருச்சபை நிர்வாகத்தினர் பூட்டி நிர்வாகம் மேற்பார்வையில் எடுத்துவிட்டனர் என எதிர்மனுதாரர் வழக்கிற்காக பொய்யாக கூறுவதாகவும், இதுநாள்வரை தனது போதனையில் திருச்சபை நடந்தவருகிறது என்றும், தான் எந்தவிதமான கடிதமும் ஏற்படுத்தவில்லை என்றும், அதனை வாட்சப்பிலும் யாருக்கும் அனுப்பவில்லை என்றும், எதிர்மனுதாரர் கூறும் கூற்றை தான் வண்மையாக மறுப்பதாகவும், GEMS நிறுவனம் எதிர்மனுதாரரை எந்த பதவியிலும் பொறுப்பிலும் நியமிக்கவில்லை என்றும், வழக்கு சொத்தில் எதிர்மனுதாரருக்கு உரிமையே கிடையாது என்றும், அவர்கள் உரிமையை இனாம் சாசனம் மூலம் விட்டு கொடுத்த பிறகு மீண்டும் வழக்கு சொத்தில் உரிமை ஏற்படுத்த நடக்காத சங்கதிகளை கூறி துர்லாபம் அடைய எதிர்மனுதாரர் முயற்சித்து வருவதாகவும், எனவே, தாவா சொத்தினை அளந்து பார்க்க வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்து தாவா சொத்தினை அளந்து பார்த்து அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடவேண்டி தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிருரையின் சுருக்கம்:</u>**

4. இந்த மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைநிற்கத்ததக்கது அல்ல. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவினை எடுத்த எடுப்பிலேயே

தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றும், எதிருரையில் நேரடியாக ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் தவிர இந்த இடைமனுவில் கண்ட இதர சங்கதிகளை இந்த எதிர்மனுதாரர்/வாதி வன்மையாக மறுப்பதாகவும், இவ்வழக்கில் வாதி தரப்பு சாட்சி விசாரணை கடந்த 02.09.2024 அன்று முடிக்கப்பட்ட பிறகு அந்த மனுவானது உள்நோக்கத்துடன் கடந்த 26-09-2024 அன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அதாவது வாதி தரப்பு சாட்சி முடிக்கப்பட்ட பிறகு இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் அம்மனு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், இம்மனு மூலம் சாட்சிகளை சேகரிப்பதற்காக இந்த இடைமனுவானது உள்நோக்கத்துடன் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மேலும் தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரிய வழக்கில் வழக்கறிஞர்/ஆணையர் தாவா இடத்தை பார்வையிட வேண்டும் என இந்த கமிஷன் பெட்டிஷன் தாக்கல் செய்ய இயலாது என்றும், இம்மனுவின் குறுந்தலைப்பு மற்றும் நெடுந்தலைப்பு தவறாக உள்ளது என்றும், எனவே, இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என கூறியுள்ளார்.

5. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சினை இந்த மனுவை அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

**<u>தீர்வு:</u>**

6. மனுதாரர் தரப்பில் தாவா சொத்துகள் ஏற்கனவே எதிர்மனுதாரருக்கு சொந்தமாக இருந்து வந்ததாகவும், தாவா சொத்தை எதிர்மனுதாரர் 18.07.2007 மற்றும் 11.04.2016 ஆகிய தேதிகளில் GEMS நிறுவனத்திற்கு இனாம் சாசனம் எழுதி கொடுத்துவிட்டார் என்றும், அதன் பின் GEMS நிறுவனம் வழக்கு சொத்தில் திருச்சபையும் அதன் பின்புறம் ஊழியம் செய்யும் போதகரான மனுதாரருக்கு குடியிருக்க வீடு கட்டிக் கொடுத்துள்ளது என்றும், மேற்படி குடியிருக்கும் வீட்டில் தான் குடியிருந்து கொண்டு திருச்சபையில் போதகராக ஊழியம் செய்து வந்ததாகவும் திருச்சபையின் முழு நிர்வாகமும் GEMS நிறுவனத்தின் பொறுப்பில் தான் உள்ளது என்றும், இந்த எதிர்மனுதாரருக்கு எவ்வித தொடர்பும் இல்லை என்றும், மனுதாரரை போதகர் பதவியிலிருந்து நீக்கிவிட்டதாக எதிர்மனுதாரர் பொய்யாக கூறிவருகிறார் என்றும், வழக்கு சொத்தில் உள்ள திருச்சபையை பூட்டி நிர்வாகத்தினர்

மேற்பார்வையில் எடுத்துவிட்டனர் என்றும், பொய்யான கட்சி செய்து வருவதாகவும், தாவா சொத்துகள் எதிர்மனுதாரரின் வசத்திலும் அனுபவத்திலும் ஒருநாளும் இருந்தது இல்லை என்றும், திருச்சபையும் வீடும் மனுதாரர் அனுபவத்திலேயே இருந்து வருவதாகவும் எனவே, தாவா சொத்தில் உள்ள திருச்சபையையும் வாதி குடியிருந்து வரும் வீட்டின் அமைப்பு மற்றும் அமைவிடத்தை வழக்கறிஞர் ஆணையத்தை நியமனம் செய்து தாவா சொத்து யாருடைய அனுபவத்தில் இருந்து வருகிறது என்பதை வரைபடம் மற்றும் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது என்றும், அப்போது தான் உண்மைத்தன்மை தெரியவரும் என்றும் கூறப்பட்டுள்ளது.

7. எதிர்மனுதாரர் தரப்பில், இந்த அசல் வழக்கானது உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதியால் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், இந்த வழக்கில் வாதி தரப்பு சாட்சியம் முடிக்கபட்ட பிறகு இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் அதனால் இந்த மனு சட்டப்படி நிலைநிற்கத்தக்கது அல்ல என்றும், பிரதிவாதிக்கு நல்ல எதிர்கட்சி இல்லை என்பதால் இந்த மனு மூலம் சாட்சியங்களை சேகரிப்பதற்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே, மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனுவை தள்ளுபடி செய்யுமாறு கூறப்பட்டுள்ளது.

8. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

9. எதிர்மனுதாரரால் மனுதாரருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தாவா சொத்தில் உள்ள திருச்சபையும் அதில் உள்ள வீடும் தனது அனுபவத்தில் உள்ளதாகவும், எதிர்மனுதாரரின் அனுபவத்தில் இல்லை என்றும், தாவா சொத்து யாருடைய அனுபவத்தில் இருந்து வருகிறது என்பது பொறுத்து வழக்கறிஞர் ஆணையரை நியமனம் செய்து தாவா இடத்தை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய வேண்டும் என கூறியுள்ளார்.

10. தரப்பினர்களுக்கு இடையே தாவா சொத்தை பொறுத்து அளவீடு சம்மந்தமான பிரச்சனையோ விஸ்தீரணம் மற்றும் எல்லை சம்மந்தமாக எவ்வித பிரச்சனையும் இல்லை என்பது தெரிய வருகிறது. தாவா சொத்து யாருடைய அனுபவத்தில் உள்ளது என்பதை காண்பிப்பதற்காகவே வழக்கறிஞர் ஆணையர்

நியமனம் செய்ய கோரி மனுதாரர் கூறியுள்ளார். நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரம் கோரும் வழக்கினை பொறுத்த வரை தாவா சொத்து யாருடைய அனுபவத்தில் உள்ளது என்பதை தரப்பினர்கள் தங்களது தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் மட்டுமே நிரூபிக்க வேண்டும் அதை விடுத்து வழக்கறிஞர் ஆணையத்தை நியமனம் செய்வதன் மூலம் அல்ல. எனவே, இந்த மனுவை தள்ளுபடி செய்யலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**11. முடிவாக இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் இன்று சரிபார்க்கப்பட்டு, பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 16.06.2025 இல் திறந்த நீதிமன்றத்தில் அவை அறியப் பகரப்படுகின்றது.

ஒப்பம் (P. கனிமொழி)

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

தரங்கம்பாடி.

**இணைப்பு:**

மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

எதிர் மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

ஒப்பம் (P. கனிமொழி)

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

தரங்கம்பாடி.